Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 03 ( 16 - 05 - 1992 ) சனிக்கிழமை ஓசை: 88

## தமிழகத்திலுள்ள அகதிகள் நாடு திரும்பத் தயக்கம்

(டில்லி)

தமிழ் நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியிருக்கும் சுமார் ஒரு இலட்சத்து 11 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் 15,000 பேர்களே மீளவும் இலங்கை திரும்ப ஆர்வமாக உள்ளனர் என இந்திய உள்துறை அமைச்சின் ஆண்டறிக்கை கூறுகிறது. முன்னர் சுமார் 30,000 அகதிகள் நாடு திரும்ப இணக்கம் தெரிவித்ததாகக் கூறப்பட்ட போதிலும், அவை ஆங்கிலப் படிவங்கள் வழங்கப்பட்டு அறியாமையில் பெறப்பட்டவை எனப் பல்வேறு மனித நேய அமைப்புகள் முன்னதாக ஆட்சேபம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. [4 ஆம் பக்கம் பார்க்க]

# விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடை

# தமிழக மக்களுக்கு இடப்பட்ட விலங்கு

### எதிர்பார்த்ததே - பிரெட்மன்

(கொழும்பு)

இந்தியா புலிகள் இயக்கம் மீது விடுத்த தடை தமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை என ஜனாதிபதி ஆர். பிரேம

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய உணர்வுக்கு டில்லி அச்சம் புலிகள் தலைமைச் செயலகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"இந்தியா புலிகளுக்கு அஞ்சவில்லை. தமிழரின் இன உணர்வுக்கும் தேசிய விழிப்புணர்வுக்குமே பயப்படுகிறது. புலிகளின் மீதான இத் தடையானது தமிழ் நாட்டு தமிழரின் இன உணர்வுக்கும் தேசிய விழிப்புணர்விற்கும் இடப்பட்ட விலங்குகள் என்றே கருத வேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய பொறுப்பு தமிழக மக்களையே சாரும்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச்செயலகம் நேற்று விடுத்துள்ள அதிகார பூர்வமான அறிக்கையில் கூறியுள்ளது

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைஒரு சட்டவிரோத அமைப்பாக பிரகடனப்படுத்தி இந்திய அரசு தடைவிதித்துள்ளது. தனது குறுகிய தேசிய நலனையும், உடனடி அரசியல் லாபத்தையும் கருத்தில் கொண்டு இந்தியாஎடுத்துள்ள இந்த நடவடிக்கை குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. தமிழீழ மக்களின் நியாயமான தேசியபோராட்டத்திற்கு இந்திய அரசு தொடர்ச்சியாக இழைத்து வரும் துரோக நடவடிக்கைகளின் ஒரு அம்சமாகவே நாம் இதனைக் கருதுகிறோம். இந்த நடவடிக்கை மூலம் தென்னாசியாவிலுள்ள தனது நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப்படுத்திவிட்டது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தூரநோக்கற்ற.ராஜதந்திர விவேகமற்ற இந்த அவசர நடவடிக்கையானது எதிர்காலத்தில் இந்திய பூகோள - அரசியல்நலன்களுக்குத்தான் பாதகமாக அமையக்கூடும்."

"தமிழ்நாட்டு இளைஞர் சிலருக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுதப் பயிற்சி அளித்ததாகவும், தமிழ்நாட்டில் பிரிவினைவாதத்தைத் தூண்டிவிட்டதாகவும் இந்தியா எமது இயக்கம் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை. இந்தியஅரசுதான் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளித்து, ஆயுதமும் வழங்கி, சிறிலங்கா அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டி விட்டது தமிழ் இளைஞர்களைபகடைக்காயாக அப்பாவித்து தனது பூகோள விரோதமானது' என இந்திய அரசு கருதவில்லை.

தமிழர் தேசிய பிரச்சினையில், அதாவது, ஒரு அந்நிய நாட்டுப் பிரச்சினையில் இந்திய அரசுதான் தலையிட்டது அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்திற்கு ஒரு ஆக்கிரமிப்புப் படையை அனுப்பி வைத்ததும் இந்திய அரசுதான் விடுதலைப் புலிகளுடன் போர் தொடுத்து தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைந்ததும் இந்திய அரசுதான் இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பத்தாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்ததும் இந்திய அரசுதான். ஆகவே ஒட்டுமொத்தத்தில் இந்திய அரசுதான், அதுவும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சி பீடம்தான்எமது உள்நாட்டுப்

### இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியோர் அறிவிக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இந்தியாவில் இருந்து திரும்பியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. அதேவேளை வவு

### புலிகள் ஆதரவாளர் திருத்தணி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முனைக்காட்டு துறை என்னுமிடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 6-45 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் வீரச்சாவை அடைந்தவர் முனைக்காட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திருத்தணி (வயது 21) என்பவர் ஆவர். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### செட்டிகுளம் ராணுவத்தால் ஆறு பொதுமக்கள் கைது

[வவுனியா]

செட்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து 500 யார் தொலைவில் உள்ள கிறிஸ்தவ குளம் என்ற இடத்திற்கு முன்னேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினர் ஆறு பொதுமக்களைக் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் கடந்த புதனன்று இடம் பெற்றது. முன்னேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினர் கிறிஸ்தவகுளம் பகுதியில் நிலை கொண்டுள்ளனர்.

### அம்பாறையில் தமிழர் வெளியேற இராணுவம் தடை

(அம்பாறை)

அம்பாறையில் சிங்கள இராணுவத்தாலும் முஸ்லிம் காடையர்களாலும் பெரும் துன்பத்திற்கு உள்ளாகும் தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதையும் இராணுவம் தடுத்து வருகிறது.

பிற மாவட்டங்களில் ஏதாவதுஏற்படும்போது அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள்சிங்கள

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பழுகாமம் சுற்றிவளைப்பு; இருவர் வீரச்சாவு; 10தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரைதிவு, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை ஆகிய முகாம்களிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ உறுப்பினர்களும் சேர்ந்து தும்பங்கேணி, காந்திபுரம்,மாவற்குடா, கற்சேனை

இச் சம்பவத்தில் போராளி 2-ம் லெப்டினன் தனஞ்செயன் (வொஷிங்டன் - சுப்பிரமணியம் தனஞ்செயன். பழுகாமம் மட்டக்களப்பு) ஆதரவாளர் ஞானசேகர் ஜெயகணேஸ் (பழுகாமம் மட்டக்களப்பு) ஆகியோரேவீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவர். இவ்

கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

கிருஷ்ண பிள்ளை தவராசா (வயது 24, 38 ஆம்கிராமம், திக்கோட்டை, மட்டக்களப்பு) என்பவர் இச்சம்பவத்தின் போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

[யாழ்ப்பாணம்]
இந்தியாவில் இருந்து திரும்பிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உடனடியாக யாழ் செயலகத்துக்கு அறிவிக்கும்படி யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் திரு.கா மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் இருந்து தமது சொந்த இடமான யாழ். மாவட்டத்திற்கு சிலர் திரும்பியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. அதேவேளை வவுனியா, தாண்டிக்குளம், வேப்பங்குளம் ஆகிய முகாம்களில் ஏற்பட்டு வரும் இடநெருக்கடிகளாலும் ஏனைய வசதியீனங்களாலும் அங்கு தங்கியிருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச்சேர்ந்தமக்கள்தொடர்ந்தும் முகாம்களில் தங்கியிருக்க விரும்பவில்லை. இதைத் தொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மகாபொல தொடர்பாக யாழ். அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)
1990 - 91 கல்வியாண்டில் மகாபொல புலமைப் பரிசில் தவறிய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும், மகாபொல புலமைப்பரிசில் பகுதியுடனும் தொடர்பு கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இவ் வருடம் மகாபொல புலமைப்பரிசில் பெறுவதற்குரிய அடிப்படைத் தகுதியாக வருடவருமானம் 40,000 மும் கணிசமான புள்ளிகளைப் பெற்றவர்களுக்குமே வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [05]

# பிச்சைக்கார நிலையில் அரசு மக்களும் அதே நிலையில்

## --காமினி திசாநாயக்கா

(கொழும்பு)
''இன்று அரசாங்கம் பிச்சைக்கார நிலைமைக்கு வந்தது போல் மக்களும் பிச்சைக்கார நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.''

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட உதவித்தலைவர் திரு. காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வைகிடைக்கும் சம்பளத்தில் ஈடு செய்ய முடியாதிருக்கிறது. ஆனால் அரசாங்கம் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பொய்ப்பிரசாரங்களைச் செய்து வருகிறது. என்றும் கூறினார். மேலும் கூறுகையில் சாதாரண பொதுமக்கள் எம்முடன் இருக்கிறார்கள் பொய்ப்பிரசாரங்கள் செய்வதை விடுத்து நாடு முழுவதும் நியாயமான பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துங்கள் அப்போது நாம் எமது பலத்தைக் காட்டுவோம்.

சாதாரண மக்களின் பிரச்சினைகள் என்ன என்பதனை நாம் புரிந்து கொண்டுள்ளோம். ஆயினும் ஒரு பிரிவினருக்கு மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைய அராங்கத்தின் நடவடிக்கைகளால் மக்கள் பெரும் தடுமாற்றத்துடனேயே வாழ்கின்றனர். இது போன்ற காலம் இலங்கையின் வரலாற்றிலேயே கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இளைஞர்களைபகடைக்காயாகப்பாவித்து தனது பூகோள நலன்களைப் பூர்த்தி செய்ய முனைந்தது. அப்பொழுது இந்தநடவடிக்கைகளை 'சட்ட

காங்கிரஸ் கட்சியின் ஆட்சி பீடம்தான்எமது உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு பாரதூரமான விளைவுகளை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மீதான தாக்குதல் கைவிடப்படவில்லை

## - கேணல் முனசிங்க

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளெதுவும் கைவிடப்படவில்லை என்று கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் திட்டமிட்டபடி உரிய நேரத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடரப்படும் என்றும் தெரிவித்தார்.

# யுத்தகள தலைமை பீடம் வவுனியாவில் அமையும்

வடக்கு - கிழக்கு மீதான யுத்த நடவடிக்கைகளை கவனிக்க யுத்தகளத் தலைமைப் பீடம் ஒன்றை அமைப்பதில் இராணுவத் தலைமைப்பீடம் தீவிர அக்கறை கொண்டிருக்கிறது எனத் தெரிய வருகிறது.

இந்தத் தலைமைப் செயலகம் அமைப்பதற்காக வவுனியா, திருக்கோணமலை, அநுராதபுரம், ஆகிய மூன்று நகரங்களையும் இராணுவத் தலைமைப் பீடம் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தலைமைச் செயலகம் வவுனியாவில் அமைக்கப்படலாம் என்று இராணுவ வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

இராணுவ தலைமை அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை அடுத்து யுத்தகளத் தலைமைச் செயலகம் யுத்த களத்திற்கு அருகாமையில் இருக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப் பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற் கொள்ளப் படுகிறது.

# மட்டக்களப்பு மாணவர் பகிஷ்கரிப்பு போராட்டம்

(மட்டக்களப்பு)
கடந்தமாதம் மண்டூரில் வெட்டிக் கொல்லப்பட்ட மாணவர்களுக்காகவும் களுவஞ்சிக்குடி பொலிசாரினால் கண்மூடித்தனமாக மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் உள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தால் மாணவர்கள் கைதாவதை எதிர்த்து கடந்த 12 ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியமை தெரிந்ததே.

பலத்த இராணுவ கெடுபிடிகள் மத்தியிலும் மாணவர்கள் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

சேர்ந்து தும்பங்கேணி, காந்திபுரம், மாவற்குடா, கற்சேனை ஆகிய கிராமங்களை சுற்றி வளைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போது விடுதலைப் புலிகள் போரளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். ஒரு பொது மகன் காயமடைந்தார். அதுடன் பத்து பொதுமக்கள் கைது செய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

(பழுகாமம் மட்டக்களப்பு)
ஆகியோரே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவர். இவ் இருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்

போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பழுகாமம், மட்டக்கள

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் சுமார் மூவாயிரம் தொண்டர் ஆசிரியர்கள் பணிபுரிவதாகவும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நால்வர் கைது

(கொழும்பு)
ஜனாதிபதி செயலகத்திற்கு அண்மையில் சந்தேகத்திற்கிடமான நான்கு இளைஞர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் முஸ்லிம் இளைஞர்கள் ஒருவர் தமிழர் ஒரு முஸ்லிம் இளைஞரின் தோற்றம் ஏற்கனவே தேடப்பட்டு வந்த ஒரு இளைஞரின் புகைப் படத்தினை ஒத்ததாக காணப் பட்டதாக கூறப்படுகிறது.

கைது செய்யப் பட்டவர்கள் எவரிடமும் தம்மை அடையாளம் காட்டும் ஆவணம் எதுவும் இருக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

# வீதி விபத்துகளில் மூவர் காயம்

[யாழ்ப்பாணம்]
நேற்று யாழ்.குடாநாட்டின் வெவ்வேறுபகுதிகளிலும் நடைபெற்ற வீதிவிபத்துக்களினால் மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

சே. சசிபாலன் [17 வயது] நாவற்குழி தச்சன்தோப்பு நவேந்திரன் [18வயது] நுணாவில், நாகன்வைரவன் [45

[4 ஆம் பக்கம் பார்க்க]

# திருமலையில் தமிழர்களின் பண்பாட்டு சின்னங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)
திருக்கோணமலையில் தமிழரின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் மாற்றும் நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது என திருக்கோணமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரூபன் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்களையும் பாரம்பரியங்களையும் அழித்துவிட்டு அங்கு ஒரு சிங்கள சமுதாயம் இருந்ததுபோல் காட்ட பௌத்த விகாரைகளையும் சிங்கள குடியேற்றங்களையும் அமைப்பதில் சிறிலங்கா அரசு தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

கிளிவெட்டி, 59 ஆம் கட்டை 13 ஆம் கட்டை, பாலம்போட்டாறு, 11 ஆம் கட்டை ஜெயபுரம் போன்ற தமிழர் வாழ்ந்த முக்கிய வரலாற்றுப் பாரம்பரியம்மிக்க இடங்களில் தமிழரின் வரலாற்றுப் பண்பாடுகள் சின்னங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன. முக்கிய வரலாற்று சிறப்புமிக்க இடமான கோணேசர் ஆலயம் பௌத்த மதகுருமாரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆலய வளவிலுள்ள வரலாற்று சின்னங்கள் மீது பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருக்கோணமலையில் மட்டக்களப்பு எல்லைப்புறத்தில் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

திருக்கோணமலையில் சிறிலங்கா அரசு தமிழருக்கு எதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சீனியை விடத் தரமான பனை வெல்லம்

சிறிலங்கா அரசினால் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையானது தமிழீழத்தில் சுய சார்புப் பொருளாதாரம் ஒன்றினைக் கட்டி எழுப்புவதற்கான சிந்தனையையும், முயற்சிகளையும் ஊக்கப்படுத்துவதாக அமைந்திருந்தது இதன் பலனாக, தமிழீழத்தில் உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் வளர்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அத்துடன் இது வரை காலமும் தமிழீழத்தில் பூரணமாகப் பயன்படுத்தப்படாதிருந்த வளங்களைத் தேசத்தின் தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்துவது என்ற விழிப்பு உணர்வினை ஏற்படுத்தியதாகும், தமிழீழத்தில் உள்ளதும், பயன்படுத்தாததுமான வளங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்கும் இது ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி, உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் வளர்ச்சி அடையத் தொடங்கின. இந்நிலை தொடர்வது தமிழீழம் பொருளாதார ரீதியான வளர்ச்சியினைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்து விடும். இதனால் தமிழீழம் பொருளாதார ரீதியிலும் பலம் பொருந்தியதாக மாறி விடும் என்ற அச்சத்தினால் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளைப் பின்னடையச் செய்வதன் மூலமே தமிழீழத்தின் சுய சார்புப் பொருளாதார வளர்ச்சியினைத் தடுக்கலாம் என்ற நோக்கில் விதித்த பொருளாதாரத் தடையைத் தளர்த்தி அத்தியாவசியமற்ற சிறிலங்காவின் உற்பத்தி முடிவுப் பொருள்களை மட்டும் தமிழீழத்துக்குள் வர அனுமதித்துள்ளது. இந்த வகையில் இப்பொருளாதாரத் தடைத் தளர்வானது தமிழீழத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கான பிரதியீட்டுப் பொருள்களையும், அத்தியாவசியமற்ற பொருள்களையுமே அனுமதிக்கின்றது என்பதனை இங்கு கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு இன்று பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழப் பகுதிகளை சிறிலங்காவின் உற்பத்திப் பொருள்கள் நிறைத்துக் கொள்ள, உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் மெல்ல சந்தையை விட்டு விலக வேண்டிய சூழ் நிலை ஒன்று உருவாக்கப்பட்டு விட்டது இந்நிலையைத் தோற்றுவிப்பதே சிறிலங்கா அரசின் திட்டமாகவும் அமைந்துள்ளது. இந்நிலையில் இத் திட்டத்திற்கு தமிழீழ மக்களாகிய நாங்கள் பலியாகலாமா?

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டு, சிறிலங்காவின் உற்பத்திப் பொருள்கள் தமிழீழத்தை நிறைத்து நிற்கும் இன்றைய நிலையில் கடந்த காலத்தை மறந்தவர்களாக, அன்று பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் எமக்கு ஆதாரமாக அமைந்திருந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களை இன்று புறக்கணிப்பவர்களாக மாறுவது சரியானதா?

தமிழீழத்தில் உள்ளதும், இதுவரை முழுமையாகப் பயன்படுத்தப்படாததுமான வளங்களில் பனை வளமும் ஒன்று இவ்வாறு பயன்படுத்தப் படாதிருக்கும் வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே தமிழீழத்தின் சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

வட தமிழீழத்தின் வருடாந்த சீனி நுகர்வு 27,000 மெற்றிக் தொன்களாகும். இந் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான பனை வளம் எமது பிரதேசத்தில் தாராளமாக உண்டு வடதமிழீழத்தில் ஏறத்தாழ 10.8 மில்லியன் பனைகள் காணப்படுகின்றன. இவற்றில் 30 வீத பனை வளத்தினை அதாவது ஏறத் தாழ 3.2 மில்லியன் பனைகளைப் பயன்படுத்தும் பட்சத்தில் எமது பிரதேசத்தின் சீனித் தேவையினை முழுமையாகப் பூர்த்தி செய்து கெள்ள முடியும்.

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை நடைமுறையிலிருந்த காலத்தில் பனை வெல்லம், பனஞ் சீனி போன்ற உள்ளூர் உற்பத்திகளே எமது சீனித் தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்தன. இன்று பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்ட நிலையில் இவ் உள்ளூர் உற்பத்திகளை பயன்படுத்துவது வெகுவாகக் குறைத்து விட்டது இதனால் பொருளாதாரத் தடையின் போது வளர்ந்து வந்த இக் கைத்தொழில் முயற்சி தடை போது பாதிப்படையும் நிலையை எதிர் நோக்கியுள்ளது.

இதை நாம் கவனிக்காது விடுவோமானால் இவ் உள்ளூர் உற்பத்தி முயற்சியானது முற்றாகச் செயல் இழந்து விடும் இந் நிலையில் சிறிலங்கா அரசு மீண்டும் பொருளாதாரத் தடையினை விதிக்கும் பட்சத்திலோ? அல்லது போர்க் காலச் சூழ் நிலை காரணமாக போக்குவரத்து வசதிகள் சீர்குலைந்து சிறிலங்காப் பொருள்கள் வர முடியாத ஒரு நிலை ஏற்படும் போதோ நாம் சீனிக்கான பிரதியீட்டுப் பொருளை பெற முடியாதவர்களாக இருப்போம்.

இவ்வாறே ஏனைய உள்ளூர் உற்பத்திப் பொருள்களையும் புறக்கணிக்கும் பட்சத்தில் அப் பொருள்களையோ அல்லது, அவற்றுக்கான பிரதியீடுகளையோ பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருப்போம்.

இதனால், எதிர் காலத்தினை முன் உணர்ந்து ஒரு முடிவு எடுக்கவேண்டியவர்கள் நாங்களே.

பனை வெல்ல நுகர்வு மூலம்,

★ பொருளா தாரச் சிக்கனத்தில்

1 கிலோ கரும்புச் சீனியின் விலை 32/- ரூபா, 1 கிலோ கரும்புச் சீனியைக் கொண்டு 40 - 45 வரையான தேநீர்களையே தயாரிக்க முடியும்.

1 கிலோபனை வெல்லத்தின் விலை 40/- ரூபா -1 கிலோ பனை வெல்லத்தினை 150 — 160 வரையான தேநீர்களுக்குப் பயன்படுத்தலாம்.

★ ஊட்டத்தில்

| (வீதத்தில்) | மாப்பொருள் | புரதம் | கல்சியம் | இரும்பு |
|---|---|---|---|---|
| கரும்புச்சீனி | 100 | — | — | — |
| பனைவெல்லம் | 95.9 | 0.20 | 0.058 | 1.40 |

மேலும் பனைவெல்லம் பொஸ்பரஸ், உயிர்ச்சத்து பி, உயிர்ச்சத்து சி, என்பவற்றையும் கொண்டுள்ளது.

★ தேசிய பொருளாதாரத்தில்

எமது பணம் சிறிலங்காவுக்குள்செல்வது குறைக்கப்படும், முற்றாக பயன்படுத்தப்படாத பனைவளத்தினை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

கைத்தொழில் ரீதியான வளர்ச்சியினை எதிர்பார்க்கலாம் பலருக்கு வேலைவாய்ப்புகள் காத்து நிற்கும்.

மொத்தத்தில் தமிழீழத்தில் சுயசார்புப் பொருளாதாரம் ஒன்றினை கட்டிஎழுப்புவதற்கான உறுதியான அடித்தளம் அமைக்கப்படும்.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்

## புலேந்திரன் நகரில் பாலர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

புலேந்திரன் நகரில் கடந்த பத்தாம் திகதி புலேந்திரன் பாலர் பாடசாலையின் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

பொஸ்கி சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் திரு. இராசா மாஸ்ரர் தலைமையில் மாலை 5-00 மணியளவில் இவ்விழா ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் பாசையூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. செழியனும் சனசமூக நிலையத்தின் கொடியினை இராசா மாஸ்ரரும் ஏற்றி வைக்க பாலர் பாடசாலையை கடற்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் திரு சிவலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.

திரு. சிவலிங்கம், திரு. அஸ்ரீன் (பாப்பா) கடற்புலிகளின் மகளிர் பொறுப்பாளர் செல்வி மங்கை, யாழ். மாநகர ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம், மரியதாஸ் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

இறுதியாக பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. இவ் விழாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணிப்புரி மேற்கு "கற்பகம்" மணிப்புரி சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூன்றாவதுவருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 00மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் சங்கத் தலைவர் திரு க பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் உச்சக்கடன் எல்லை பற்றித் தீர்மானிக்கப்பட உள்ளதால் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது சமூகம் தரும்படி சங்கச் செயலாளர் திரு கி.மரியநாயகம் தெரிவித்துள்ளார். (24)

## சிறுவர் காயம்

(மாத்தளை)

காலி வித்தியாலோக்க பிரிவினா விகாரை சுவர் இடிந்து விழுந்ததால் ஒரு அதிரடிப் படைவீரரும் 13 பாடசாலை மாணவர்களும் காயமடைந்துள்ளனர். இவர்கள் சுவரில் சாய்ந்து கொண்டும் அதன் மீது ஏறிக்கொண்டும் இருக்கையிலேயே இச் சுவர் திடீரென இடிந்து விழுந்ததால் மேற்படி நபர்களுக்கு காயம் ஏற்பட்டது

## அறிவித்தல்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பிரதேச மன்றங்களின்

### விசேஷ பொதுக்கூட்டம்

விதி 18 (1) இன் கீழ்

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கூட்டுறவுச் சங்கங்களின் விதி இல 18(1)இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக பொன்னையா சிவலிங்கம் தலைமைக் காரியாலயப் பரிசோதகர் ஆகிய நான் மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்க் காணும் பிரதேச மன்றங்களின் விசேட பொதுக் கூட்டத்தினை இத்தால் அழைக்கின்றேன்.

| பிரதேச மன்றம் | | காலம் |
|---|---|---|
| நல்லூர் | 24 - 05 - 1992 | பி. ப. 3 30 மணி |
| யாழ்ப்பாணம் | 24 - 05 - 1992 | பி. ப, 4 00 மணி |

இடம்: சங்க மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. பிரதேச மன்றக் குழு உறுப்பினர்கள் ஒன்பது பேரைத் தெரிவு செய்தல்
4. நன்றியுரை

பொன்னையா சிவலிங்கம்
தலைமைக்காரியாலய பரிசோதகர்

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

( சி/ 4423 )

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
01 - 06 - 1970



தாயக மண்ணில்
16 - 04 - 1992

## புரிந்து கொள்ளாமை தான் பிரச்சினைக்கு காரணம்

- பேராசிரியர் ஜி. எவ். பீரிஸ்

(கொழும்பு)

சமூகத்தின் ஒரு பகுதி மற்றுமொரு பகுதியினரை புரிந்து கொள்ளாததன் காரணமாகவே இனப்பிரச்சினை போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக கல்வி பயிலும் போது பல இனங்களை சார்ந்த மாணவர்களும், ஒருங்கிணைந்து பயிலுவதற்கு ஏற்ற வகையில் கல்விக்கிட்பது தொடர்பியல் வாயிலாகவே ஏற்பட வேண்டும். மொழியே தொடர்பு ஏற்படுவதற்கான பிரதான தடைக்கல்லாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

## ஏற்று நீர்ப்பாசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஸ்ணபுரம் கிராமிய உற்பத்திக் குழுப் பிரிவில் ஏற்று நீர்ப்பாசனம் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு பழக்கப் பட்ட மாடுகளைக் கொண்டு ஏற்று நீர்ப்பாசனம் மேற் கொள்ளப்படுகிறது.

## மத்திய கிழக்கில் தொழில் புரிந்தோர்

### நட்டஈட்டுக் கொடுப்பனவு விண்ணப்பப்படிவம் பெறலாம்

## கிளிநொச்சி மாவட்ட

### தொண்டர் ஆசிரியர் குழு கொழும்பு பயணம்

(கிளிநொச்சி)

தொண்டர் ஆசிரியர் நியமனத்தை விரைவுபடுத்துவதற்காக கிளி.மாவட்ட தொண்டர் ஆசிரியர் குழுவொன்று கொழும்பு சென்று கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ளவுள்ளது

இக்குழுவில் கல்வித்திணைக்கள அதிகாரிகள், அரசஅதிபர், செஞ்சிலுவை சங்கப்பிரதிநிதிகள், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதி நிதிகள் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதி நிதிகள் ஆகியோர் இடம் பெறுகின்றனர் இக்குழு அடுத்தவார முற்பகுதியில் தனது. பயணத்தினை ஆரம்பிக்க இருக்கின்றது.

கவே இனப்பிரச்சினை போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக கல்வி பயிலும் போது பல இனங்களை சார்ந்த மாணவிகளும், ஒருங்கிணைந்து பயிலுவதற்கு ஏற்ற வகையில் கல்வித்திட்டங்கள் மற்றும் கற்பித்தல், நடைமுறைகள் அமைந்திருக்க வேண்டும் என கொழும்புப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுவாக இனங்களுக்கிடையில் புரிந்துணர்வென்

...இல்லாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

...ஏற்று நிர்ப்பாசனம் மேற் கொள்ளப்படுகிறது.

## மத்திய கிழக்கில் தொழில் புரிந்தோர்
# நட்டஈட்டுக் கொடுப்பனவு விண்ணப்பப்படிவம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

குவைத், ஈராக் ஆகியநாடுகளில் இருந்து யுத்தத்தின் காரணமாக நாடு திரும்பியவர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கான விண்ணப்பப் படிவங்கள் இம் மாதம் 20-ம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 5-ம் திகதிவரை யாழ். செயலகத்தின் பரிபாலனக்கிளையில் வழங்கப்படும்.

இவ் விண்ணப்பப்படிவம் பெறுவதற்கு பாஸ்போட், நட்டமேற்பட்ட பொருள்கள், கொள்வனவு செய்ததற்கான பற்றுச்சீட்டு, உயிர் இழப்பு ஏற்பட்டிருப்பின் இறப்பு அத்தாட்சிப்பத்திரம் காயமேற்பட்டிருப்பின் வைத்திய அறிக்கை ஆகிய ஆவணங்களுடன் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். இவ் ஆவணங்கள் இன்றிவரும் எவருக்கும் விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படமாட்டாது. நட்டஈடு கோரி ஏற்கனவே விண்ணப்பங்கள் அனுப்பி அதற்கான பதிவு இலக்கங்கள் கொழும்பு அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. இவ்வாறு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினை தீர்வதை கனடா விரும்புகிறது
## - அந்திரே வின்னெட்

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை சுமுகமாக தீர்வதனை கனேடிய அரசாங்கம் ஆர்வமுடன் எதிர்பார்க்கிறது என்றும் இனப்பிரச்சினை காரணமாக இதுவரை பத்து இலட்சம் மக்களுக்கு அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் கனேடிய தூதரகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் அந்திரே வின்னெட் தெரிவித்தார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கனடாவும் சிறுபான்மையினரைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில் இலங்கைஎதிர் கொள்ளும் அதேவகை பிரச்சினைகள் அதற்கும் உண்டு. ஆனால் இலங்கை ஒரு சிறிய நாடு ஆகவே பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# வவு. இருந்து அகதிகள் வடக்கே அனுப்பப்படுகின்றனர்

( கொழும்பு )

தமிழகத்திலிருந்து தமது சுய விருப்பத்தின் பேரில் தாயகம் திரும்பிய தமிழ் அகதிகள் மீளக் குடியேறுவதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம். கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகியபகுதிகளுக்கு வவுனியாவிலிருந்து அனுப்பப்பட்டு வருகின்றனர் என்று வவுனியா அகதி முகாம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் பிரகாரம் முதல் தொகுதியினர் கடந்த வார இறுதியில் வேப்பங்குளம், தாண்டிக்குளம் அகதி முகாம்களிலிருந்து இப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# லஞ்சக் குற்றச்சாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி

(கொழும்பு)

ஹட்டன் பொலிஸ் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரி ஒருவரை லஞ்சக் குற்றச்சாட்டு தொடர்பாக லஞ்ச விசாரணைக் குழுவினர் கைது செய்துள்ளனர்.

இவர் ஹட்டன் மாவட்டநீதிவான்முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்.

## விவசாய பயிற்சி வகுப்பு

பரந்தன் வை. எம். சி. ஏ இளைஞர் பயிற்சி நிலையத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

...கொழும்பு சென்று கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ளவுள்ளது இக்குழுவில் கல்வித்திணைக்கள அதிகாரிகள், அரசஅதிபர், ...பெறுகின்றனர் இக்குழு அடுத்தவார முற்பகுதியில் தனது. பயணத்தினை ஆரம்பிக்க இருக்கின்றது.

# நியாய விலையில் வாங்க ஆய்வு நிறுவனம் திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வு வட்ட கருத்தரங்கின் மாதாந்த அமர்வில், ''நெல் உற்பத்தியில் இயற்கை சமநிலையை ஏற்படுத்தல்'' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ் அமர்வில் பெரும்போக நெற்செய்கையில் பொருளாதாரத் தடை காரணமாக ஏற்பட்ட உற்பத்தி செலவு அதிகரிப்பு, விளைச்சல் குறைவு ஆகிய பிரச்சனைகளுடன் தற்போது ஒரு மூடை நெல் 525 /- ரூபாவாக சரிவடைந்துள்ளதும் இது விவசாயிகளைப் பாதித்திருப்பதும் குறித்து ஆராயப்பட்டது.

இதன் மூலம் எதிர் வரும் மாதம் முதல் நிர்ணயித்த விலைப்படி பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபட கச்சேரி மற்றும் இதர நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# இலவச சிகிச்சை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை ஆரம்பசுகாதார நிலையத்தில் யாழ். மாநகரசபையின் இலவச சித்த வைத்திய நிலையம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு மாநகர சபை ஆணையாளரினால் திறந்து வைக்கப்பட உள்ளது.

இந்நிலையம் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனிக்கிழமை ஆகிய நாட்களில் காலையில் இயங்கும். இதனை யாழ். சுகாதார வைத்தியஅதிகாரி தெரிவித்துள்ளார்.


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணி

காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

# Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4347)




## மேஜர் வளர்மதி
### (சாந்தி செல்லத்துரை)

(வாழைச்சேனை மட்டக்களப்பு)

தமிழா நீ! மானம் ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொள் - அது
உன்னைச் சாவின் பின்னாலும் வாழவைக்கும்

பெற்றோர், சகோதரர், நண்பர்கள்.

(சி/4418)

# நினைவு கூருகின்றோம்...

## 1992-05-16

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் இயச்சச்சியில் சிறிலங்காப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேறகொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு நகரப்பகுதியில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய - டயஸ் (ராஜி - மட்டக்களப்பு)

வெற்றிலைக்கேணியில், இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமல்போன - அதே இடத்தைச் சேர்ந்தவரும், போக்கறுப்புப்பகுதி இராமசேவகருமான தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு புத்தூர் வாதரவத்தைப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல்போன இளம்பெண், 3 இளைஞர்கள் - மற்றும், சுட்டுக்கொல்லப்பட்ட பருத்தித்துறை, வியாபாரி மூலையைச்சேர்ந்த சங்கானைப்பகுதி தபால் நிலைய அதிபர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4422)

### சிந்தனைக்கு

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக்கு றின்.

— திருக்குறள் —


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 16-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 65


## தமிழக மக்களின் பொறுப்பு

"இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோதமானது என மத்திய அரசு தடை செய்துள்ளது" இவ் அறிவிப்பை நேற்று முன்தினம் இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் இந்நடவடிக்கை துரோகத்தனமானதும், பெரும் காட்டிக்கொடுப்பும் ஆகும். இது தமிழர்தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு எதிராக இந்திய மத்திய அரசு மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் ஒருபகுதியே ஆகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்வதற்குத் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசிற்குக் கொடுத்த அழுத்தமே காரணம் என பல செய்தியாளர்கள் விமர்சனம் செய்துள்ளார்கள். இதனை வலியுறுத்துவதுபோல் செல்வி ஜெயலலிதாவின் கடந்த கால நடவடிக்கைகளும் அமைந்திருந்தன என்பதிலும் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால், இத்தடை உத்தரவிற்கு செல்வி ஜெயலலிதா தான் காரணம் என்று கூறுவதைவிட, இந்திய பிராமண அதிகார வர்க்கம் செய்த தமிழரின் தேசிய விழிப்புணர்ச்சிக்கு எதிரான சூழ்ச்சியில் செல்வி ஜெயலலிதாவும் ஒரு அங்கம் எனக் கூறுவதே பொருந்தும்.

1983 ஆம் ஆண்டில் தமிழர் தேசியஇன விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக முனைப்புப்பெற்ற போது, இந்தியா தனது பூகோள நலனுக்கு ஏற்ற வகையில் தமிழர் போராட்டத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணியது. தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கியது. ஆனால், பயிற்சியளிக்கப்பட்டவர்கள் தமிழர் தேசிய நலன் என்பதைவிட இந்திய நலனுக்கே முதன்மை அளிக்கவேண்டும் என இந்தியா கருதியது.

இதனை விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே ஏற்றுக்கொண்டதாக இல்லை. இந்தியாவை எப்பொழுதும் தனது நட்பு சக்தியாகவே விடுதலைப் புலிகள் கருதி வந்திருப்பினும், இந்தியாவின் கைப்பொம்மையாக, இந்தியாவின் ஏவலாளிகளாக விடுதலைப் புலிகள் இருக்கத் தயாராக இருக்கவில்லை என்பதை வற்புறுத்தி வந்தனர். இந்நிலையில், ஏனைய தமிழ் இயக்கங்களைக் கொண்டு தமிழரின் தேசிய உணர்வைப் பிரதிபலிக்கும் விடுதலைப் புலிகளை அழித்துவிட இந்தியா முயன்றது. ஆனால் இதில் தோல்வி கண்டது. தமிழரின் தேசிய உணர்ச்சியுடன் பின்னிப்பிணைந்து நின்ற புலிகள் வெற்றியடைந்தனர்.

# எதிர்கால போர்முனைகளில் இயந்திர மனிதனும் ஈடுபடலாம்

### -- அமெரிக்க ஆய்வில் தகவல்

(வாஷிங்டன்)

"எதிர்கால போர்களில் கணணிகள் முக்கிய பங்கு வகிக்கும் காரணத்தால் அவைகள் கூடிய தாக்குதல் இலக்குகளாக மாறும். எதிரியின் கணணிகளை வலுவிழக்கச் செய்வதற்கும் தடைசெய்வதற்கும் வழி வகைகளை கண்டு பிடிப்பது போல் மின்னியல் வைரஸ் நோய்களிலிருந்தும் சதிச் செயல்களிலிருந்தும் தனது கணணி வலைப்பின்னலை பாதுகாப்பதும் அமெரிக்க ராணுவத்தின் நோக்கமாகும்."

இவ்வாறு, அண்மையில் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட ஆய்வொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. 301 பக்கம் கொண்ட இவ்வாய்வு அமெரிக்க அரசாங்கத்திற்காக ஐக்கிய அமெரிக்க காங்கிரசால் அமைக்கப்பட்ட தேசிய அறிவியல் கழகத்தில் ஆராய்ச்சி சங்கத்தால் செய்யப்பட்டதாகும்.

இவ் ஆய்வுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 'பாலைவனப் புயல்' நடவடிக்கையின் போது அமெரிக்காவின் ஆயுதங்கள் ஈராக்கினதை விட எவ்வளவு தூரம் உயர்வானவையாக இருந்தது போல் இன்றிலிருந்து முப்பது ஆண்டுகளின் பின் உபயோகிக்கப்படும் போர் ஆயுதங்கள் இன்றைய உயர் [illegible]ங்களிலும் பார்க்க மிகச் சிறந்தவையாக இருக்கும்.

கணணிகளாலும், மனிதனில்லாமலே இயங்குபவைகளாலும் நடாத்தப்படும் போர் அதிகமானவையாகவும், பேரச்சம் தருபவையாகவும் இருக்கும்.

இம் முன்னேற்றங்களால் இறுதியில் போர்கள் அதிகரிக்கும் என்றும் இழப்புகள், குறைவானதாக இருக்கும் என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வளர்ச்சி அடைந்த நாடுகளில் வாழும் மக்களுக்கு ஏற்படும் இறப்புக்கள் குறைந்த அளவில் இருக்கக் கூடுமேயானால் அந்நாட்டுமக்கள் போர்களை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆண்டளவில் தரைப் போரின் முக்கியத்துவம் இரண்டு துறைகளில் தங்கியுள்ளது என்று இவ் ஆய்வு குறிப்பிடுகிறது.

முதலாவது தகவல் சேகரிப்பதிலும் அதை பாதுகாப்பதிலும் மேலாதிக்கம் அடைதல். இந்த விடயத்தில் கணணி தீர்க்கமான பங்கு ஏற்கும். போர் முனையில் கோடிக்கணக்கான கணணிகள் உபயோகப்படுத்தப்படும். அவைகள் காலாட்படை கொண்டு செல்லக்கூடிய முறையில் சட்டைப் பைகளில் அமைந்திருப்பவையாகவும் நுண் செயற்பாட்டுடன் ஆயுதங்களில் பொருத்தப்பட்டவையாகவும் இருக்கும்.

இரண்டாவது ஆபத்துச் செயற்பாடான வேவுபார்த்தல், எதிரிப்படைகளை இனங்கண்டு கொள்ளுதல், நிலக்கண்ணிகளை அகற்றுதல், காயப்பட்டோரை அகற்றுதல், முன்னணியில் நின்று போரிடுதல் போன்றவற்றிற்கு இயந்திர மனிதர்களை உபயோகிக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

## ஐ.நா.வெற்றி அடையாத விடயங்களில் ஆப்கானும் ஒன்று

(வாஷிங்டன்)

உலக ஸ்தாபனமான ஐக்கிய நாடுகள்ஸ்தாபனம் தனது இலட்சியக் குறிக்கோள்களை எட்டுவதில் வெற்றி காணாமல் போயிருக்கும் முயற்சிகளில் ஆப்கானிஸ்தான் பிரச்சினையும் ஒன்றாகும். இவ்வாறு வாஷிங்டனில் தேசிய பத்திரிகைக் கிளப்பில் உரையாற்றிய ஐ.நா.பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்டர்ஸ்காலி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தேசியசமரசம்எட்டப்படாமல் போனால் யூகோஸ்லாவியாவைப் போலவே ஆப்கானிஸ்தானும் பிளவுபட்டு சிதைவடைந்துபோகலாம் என்று எச்சரித்தார்.

ஆப்கானிஸ்தானின் பிரதேச ஒருமைப்பாட்டை பேணிப் பாதுகாப்பது தான்ஐ.நாவிற்கு முக்கியம்என்று தெரிவித்தார்.

## ரஷ்யாவிற்கு உதவி வழங்க அமெரிக்கா நிபந்தனை

(வாஷிங்டன்)

இந்தியாவிற்கு ராக்கட் தொழில் நுட்ப அறிவு வழங்குவதை, ரஷ்யா கைவிடும் பட்சத்தில் அமெரிக்காவின் உதவி ரஷ்யாவிற்கு கிடைக்க வகை செய்யும் திட்டம் ஒன்றை அமெரிக்க வெளியுறவுக் கமிட்டி ஏற்றுக்கொண்டுள்ளது.

ரஷ்யாவுக்கான நிதிஉதவி, மசோதா சமது சட்ட முன் வரைவுகளில் தலையாயது என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்திருந்த போதிலும் கூட இந்தத் திருத்தத்தை வெளியுறவுக் கமிட்டி ஏற்றுக் கொண்டுவிட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுடனான தனது ஒப்பந்தத்தை ரஷ்யா கைவிடுவதற்கு இந்தத் திருத்தம் வகை செய்யும் என்று அமெரிக்க செனட்டர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்தியாவிற்கு ராக்கட் தொழில் நுட்பத்தை வழங்குவதற்கு அமெரிக்கா தடைவிதிப்பது நியாயமற்றது என்று மாஸ்கோவில் அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்ட பின்னரும் இத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### பாலஸ்தீனியர் தொடர்பாக

## அமெரிக்காபுதியநிலைப்பாடு இஸ்ரேல் அரசு அதிருப்தி

(வாஷிங்டன்)

பாலஸ்தீனியர் மீண்டும் இஸ்ரேலில் குடியேறுவதற்கான உரிமைகளை வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் 1984 ஆம் ஆண்டுத் தீர்மானத்தை ஆதரிப்பதாக அமெரிக்கா தனது நிலைப்பாட்டைப்புதுப்பித்துள்ளது.

அமெரிக்காவின் இந்நிலைப்

## கொர்பசேவிற்கு ஐ. நா. விருது

முன்னாள் சோவியத் யூனியனின் ஜனாதிபதி கொர்பசேவிற்கும் அவரது மனைவிக்கும் ஐ. நா. அல்பர்ட் சுவெட்ஸர் விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ஐ. நா. பொதுக் காரியதரிசி பூட்டாஸ் காலி சார்பில் ஐ. நா. உதவிப் பொதுக் காரியதரிசி ஜோசப் டுபி. ரீட் இந்த விருதினை வழங்கினார்.

மனித சமூகத்திற்கு அளப்பரிய சேவைசெய்தவர்களுக்கு ஆண்டு தோறும் அல்பர்ட் சுவெட்ஸர் தலைமைப்பதவி விருது வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சுக்கும் அவரது மனைவிக்கும், முன்னாள் ஜனாதிபதி றேகனுக்கும் அவரது மனைவிக்கும் அளிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்க பிரசை அல்லாத ஒருவருக்கு சுவெட்ஸர் விருது வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு

அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் கூட்டம் நேற்று முன்தினம் இந்தோனிசியா நுஜாடுவ நகரில் தொடங்கியது.

நாம் என்றழைக்கப்படும் இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கவிருக்கும் இந்தோனிசியா நாட்டின் ஜனாதிபதி சுகாட்டோ கூட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

103 நாடுகளிலிருந்து அமைச்சர்கள் அல்லது பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கும் இக்கூட்டம் இந்தோனிசியாவில் நடக்கவிருக்கும் அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டின் முன் ஏற்பாடாக் கூடுகிறது.

சுமார் 31 வருடங்களுக்கு முன்னால் அணிசேரா நாடுகளின் அமைப்பு உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவுக்கு அங்கீகாரம் கிடைத்தது துரதிர்ஷ்டமே

### - உக்ரைன் அதிபர்

(கீவ்)

முன்னாள் சோவியத் யூனியனின் வாரிசாக உலகநாடுகள் ரஷ்யாவை அங்கீகரித்திருப்பது துரதிர்ஷ்ட வசமானது என உக்ரைன் ஜனாதிபதி லியோனிட் கிராவ்சுக் கூறினார்.

உக்ரைனும் இதர காமன்வெல்த் சுதந்திரக் குடியரசுகளும் கடந்த டிசம்பர் மாதம் ஐ. நா. விலும், பாதுகாப்புச் சபையிலும் சோவியத் யூனியனின் இடத்தை ரஷ்யா வகிக்க வேண்டும் என இணக்கம் தெரிவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் உக்ரைன் அதிபர் சோவியத் யூனியனின் கடனை அடைப்பதில் உக்ரைன் உதவிய போதிலும் செல்வத்தை மட்டும் ரஷ்யாவே எடுத்துக் கொண்டது என்றும் கூறினார்.

## காபூல் அரசின் செயலுக்கு பாது. அமைச்சர் கண்டனம்

(காபூல்)

தவறான அம்சங்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்

விரும்பும் ஒரு நாடல்ல எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்

...ரின் தேசிய உணர்ச்சியுடன் பின்னிப்பிணைந்து நின்ற புலிகள் வெற்றியடைந்தனர்.

இந்நிலையில், இலங்கையிலேற்பட்ட தமிழர்தேசிய இன உணர்வும், எழுச்சியும் இந்தியாவிற்குப் பெரும் அச்சத்தைக் கொடுத்தது. தமிழகத்தில் ஐம்பதுகளில் தீவிரமடைந்த திராவிட இயக்கம் அறுபதுகளில் தளர்ச்சி அடைந்தவேளையில் நிம்மதியடைந்த இந்திய ஆளும் அதிகாரவர்க்கம் தற்பொழுது இலங்கையில் இருந்து எழுந்துவரும் தமிழரின் தேசிய உணர்வினைக்கண்டு அச்சமடைந்தது/அடைந்துள்ளது. தமிழரின் இத்தேசிய உணர்வை இலங்கைக்குள்ளேயே நசுக்கிவிட வேண்டும் என்ற நோக்கிலேயே 'இந்தியா அமைதிப்படை என்ற போர்வையில் ஒரு பெரும் படை ஒன்றை இலங்கைக்கு அனுப்பியது.

இலங்கைத்தமிழர் தமது உற்ற நண்பன் எனக்கருதி இருந்த இந்தியா தமிழரின் முதுகில் குத்தியது. பல்லாயிரக்கணக்கில் தமிழர் கொல்லப்படுவதற்கும், அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதற்கும் காரணமாயிற்று. மேலும், தனது கைப்பாவைகளாகச் செயற்படக்கூடிய ஆயுதம் தாங்கிய குழுக்களை உருவாக்கி தமிழர் தேசிய போராட்டத்தை மழுங்கடிக்கவும் தனது செல்வாக்கை நிலைநாட்டவும் முற்பட்டது.

ஆனால் இந்தியாவின் இம்முயற்சியும் தோல்வி கண்டது. தமிழரின் தேசிய எழுச்சி தமிழீழ மண்ணில் இந்திய வல்லாதிக்கத்தைத் தோல்வி காணச்செய்தது. இதேவேளை தமிழீழ மண்ணில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி படிப்படியாகத் தமிழ்நாட்டிலும் பரவத் தொடங்கியது. இது இந்திய ஆளும் வர்க்கத்தினருக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் குறிப்பிட்டுள்ளதுபோல் ''இந்தியா அஞ்சுவது புலிகளுக்கு அல்ல. தமிழரின் இன உணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்குமே. தமிழ்த் தேசாபிமான எழுச்சியின் புரட்சி வடிவமாகவே இந்திய அரசு புலிகளையும், தலைவர் பிரபாகரனையும் நோக்குகின்றது. இதனால்தான் புலிகளைத் தடைசெய்து தலைவர் பிரபாகரன் மீது மாசு கற்பிக்க இந்தியா முயற்சிக்கின்றது''

இதேவேளை புலிகளின் மீதான தடையின்மூலம் தமிழ்நாட்டில் உருவாகிவரும் முக்கிய தேசிய விழிப்புணர்ச்சியைக் கட்டுப்படுத்திவிடலாம் என இந்திய ஆளும்வர்க்கம் கருதுகின்றது. இ ற்கு தமிழகத்திலுள்ள திராவிடக் கட்சிகளின் வெளி முரண்பாடுகளையும், உள் முரண்பாடுகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது. இதனை நோக்கும்போது ''புலிகள் மீதான இத்தடையானது தமிழ்நாட்டுத் தமிழரின் இன உணர்விற்கும், தேசிய விழிப்புணர்விற்கும் இடப்பட்ட விலங்குகள் என்றே கருத வேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறியும் பொறுப்பு தமிழக மக்களையே சாரும்!!

---

...த்தை வெளியுறவுக் கமிட்டி ஏற்றுக் கொண்டுவிட்டது குறிப்பிடத்தக்கது.

...ரேலில் குடியேறுவதற்கான உரிமைகளை வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் 1984

தனது நிலைப்பாட்டைப் புதுப்பித்துள்ளது.

அமெரிக்காவின் இந்நிலைப்பாடு இஸ்ரேலில் பெரும் எதிர்ப்புகளைக் கிளப்பியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா இந்நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பது இஸ்ரேலுடனான போருக்கு அழைப்பு விடுப்பதைப் போல இருப்பதாக இஸ்ரேலிய தலைவர்களை மேற்கோள்காட்டி இஸ்ரேலிய செய்தித் தாள்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(காபூல்)

தவறான அம்சங்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படுவதை கண்டனம் செய்துள்ள ஆப்கானிஸ்தானின் முக்கிய கெரில்லாத் தளபதிகளில் ஒருவரும், தற்போதைய பாதுகாப்பு அமைச்சருமான அப்துல் ஹக் மசூத் செய்தியாளர்களிடம் பேசுகையில் ஆப்கானிஸ்தான் பழமையை விரும்பும் ஒரு நாடல்ல எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் உணவு, மருத்துவம், பாதுகாப்பு, தொழில்துறை மற்றும் பொருளாதாரத்தைப் பற்றித்தான் அரசாங்கம் அக்கறையும் கவலையும் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கூட்டுகடற்படை ஒத்திகைகள் நடத்துவது சரியானதே

### - சரத்பவார்

(டில்லி)

மற்ற நாடுகளுடன் கூட்டு கடற்படை ஒத்திகைகள் நடத்துவது சரியான முடிவே என்று இந்திய மத்திய அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் நாடுகள் பரஸ்பரம் ஒன்றையொன்று புரிந்து கொள்ளவும் கடற்படைகளுக்கிடையே ஒத்துழைப்பிற்கும் இத்தகைய பயிற்சிகள் உதவும் என்றும் தெரிவித்தார்.

விசாக பட்டினத்தில் கிழக்கு பிராந்திய கடற்படை அதிகாரிகளிடையே பேசிய அவர் இத்தகைய கூட்டு கடற்படை பயிற்சிகள் ஒரு நாட்டுடன் மட்டுமன்றி எல்லா நட்பு நாடுகளுடனும் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

## அணு ஆயுதத் துறையில் இந்தியாவிற்கு ஆசை

### - சி.ஐ.ஏ.தகவல்

( டில்லி )

அணு ஆயுதத் துறையில் ஆசையுள்ள நாடுகளில் இந்தியா முன் மாதிரியாக உள்ளது என்றும், இரசாயன ஆயுதங்களை அது பெற்றுள்ளது என்றும், அமெரிக்க உளவு விசாரணை அமைப்பான சி.ஐ.ஏயின் தலைவர் ராபர்ட் கிளேவ் கூறியுள்ளார்.

அவரது இக்கூற்றை மறுத்துள்ள இந்திய அரசு இந்தியாவின் அணுசக்தித் திட்டம் ஆக்கப் பூர்வமான பணிகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

## பங்களாதேஷ் பிரதமர் இந்தியா விஜயம்

(டாக்கா)

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா மூன்று நாள் பயணமொன்றை மேற்கொண்டு இம்மாதம் இந்தியா செல்லவுள்ளார் என பங்களாதேஷ் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபன பி. எஸ். எஸ். அறிவித்தது

கங்கைநதிப் பிரச்சினை உட்பட முக்கிய பரஸ்பர பிரச்சினைகள் குறித்துக் காலிதா ஸியா இந்தியப் பிரதமருடனும் மற்றும் அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்துவார் என்றும்,

கங்கை நீரைப் பகிர்ந்து கொள்ளும் விவகாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படாவிட்டால் பங்களாதேஷ் பிரதமர் இந்தியா செல்லமாட்டார் எனவும் பங்களாதேஷ் வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கங்கை நீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினை இரு நாடுகளுக்குமிடையே இருந்து வரும் நீண்ட காலப் பிரச்சினையாகும்.

### 'பர்தா' அணியாத

## முஸ்லிம் பெண்கள் மீது காஷ்மீரில் தாக்குதல்

காஷ்மீரில் பர்தா அணியாத முஸ்லிம் பெண்கள் மீது தடை செய்யப்பட்ட முஸ்லிம் தீவிரவாதிகள் சாயத்தை வீசினர்.

கடந்தபுதன்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் தீவிரவாதிகளின் அத்து மீறலைத் தடுக்க முயன்ற பொலிஸாரையும் அவர்கள் எச்சரித்தனர். பர்தா அணியாத பெண்கள் இதற்கான பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டி நேரிடும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

முகத்தில் சாயம் அடிக்கப்பட்ட இளம் பெண்கள் வீதிகளில் அழுதபடியே சென்றார்கள் என்றும் இஸ்லாமிய சட்டத்தைக் கடைப்பிடிக்க ஏன் பெண்களை மாத்திரம் தீவிரவாதிகள் கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஆப்கானிஸ்தானில்

## இஸ்லாமிய சமூகம் உருவாக இடைக்கால அரசு முயற்சி

( காபூல் )

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமியக் குடியரசு ஒன்றை அமைத்த இடைக்கால அரசாங்கம் இஸ்லாமிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவதில் முனைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்லாமிய சினிமா தணிக்கை குழுவினர்கள் எல்லாத் திரைப்படங்களையும் தணிக்கை செய்வதற்கு ஏதுவாய் இந்த வாரத்தில் ஒரு டசின் சினிமா தியேட்டர்களை புதிய அரசாங்கம் மூடி விட்டது.

அரசு நடத்தும் தொலைக்காட்சியில் ஒவ்வொருவியாழன் இரவும் இந்திய திரைப் படங்களை திரையிட்டுவந்த மரபை இடைக்கால அரசு நிறுத்தி விட்டது.

பெண்மணிகள் அனைவரும் முகத்திரை அணியவேண்டும், மதுபானம் அருந்தக் கூடாது. நடுப்பகல் தொழுகை அவசியமானது என்றும் இந்த அரசு வலியுறுத்தியுள்ளது.

### தென் ஆபிரிக்காவில்

## பல்லின உயர்சபை அமைக்க வெள்ளையர்கள் இணக்கம்

(ஜொஹனஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சியைஜனநாயகத்துக்கு மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதிநிதிகள் கடைசி நிமிடத்தில் பலன் தரும் திருப்பமொன்றை கண்டுள்ளனர்.

இது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது கூட்டத்திற்கு முன்னரே இத்திருப்பம் காணப்பட்டது

வெள்ளையர் ஆட்சியைஜனநாயகத்துக்கு மாற்றும் நடவடிக்கைகள் குறித்து கடந்த ஐந்து மாதங்களாக பேச்சு நடாத்தி வரும் பிரதிநிதிகள் இந்த விவகாரத்தில் விரிவான இணக்கமொன்றை கண்டிருப்பதாக கூறினார்.

சுதந்திரமான பல்லின இடைக்கால உயர்சபை தலைமையிலான அரசாங்கம் அதன் அதிகாரத்தை பங்கிட்டுக் கொள்ளும் முதல் கட்ட யோசனையில் கடந்த திங்கள் இணக்கம் காணப்பட்டது.

ஈழநாதம்

## தொண்டர் ஆசிரியருக்கு

# நிரந்தர நியமனம் கோரி கிளி. ஆசிரியர்கள் ஊர்வலம்

(கிளிநொச்சி)

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களினால் கடந்த புதன்கிழமை மாபெரும் கண்டன ஊர்வலமொன்றையும், பொதுக்கூட்டத்தையும் நடாத்தினர்.

இவ்வூர்வலம் புனித திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமான இப்பேரணியில் எட்டுக் கொத்தணியைச் சேர்ந்த பெருந்தொகையான ஆசிரிய மாணவர்கள் இக்கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டதுடன் பொதுக் கூட்டம் கிளி. கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றது இதையொட்டிக் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

பின்னர் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் கிளிநொச்சி அரச அதிபருக்கும், கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருக்கும் தமது மகஜர்களைக் கையளித்தனர்.

## கைப்பணிப் பொருட்காட்சி நேற்று ஆரம்பமானது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மாதர் அபிவிருத்தி நிலையங்களின் தையல், மனையியல் கைப்பணிப் பொருட்காட்சி நேற்று யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. காலை 9.00 மணியளவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மங்கள விளக்கேற்றி வைக்க, திருமதி மாணிக்கவாசகர் சம்பிரதாயபூர்வமாக பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்தார்

இவ்வைபத்தில் யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து வைத்திலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன், திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு சுவாமிநாதன், யாழ் பிரதேசச் செயலாளர் திரு. கருணாராசா, யாழ் மாநகர ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (பா)

## தகவல் கொடுக்கதவறினாராம் மட்டு நகர் வாசிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(யாழ்ப்பாணம்)

தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தை ஏற்ற மட்டுநகர் வாசிக்கு பத்துவருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நல்லையா புவனேசராஜா மீது 1-1-90 க்கும் 24-9-90 ஆற்கும் இடைப்பட்ட காலத்தில் மட்டுநகர் புல்லுமலையில் விடுதலைப்புலிகளான சக்தி, விமல், நடேசன் ஆகியோர் பற்றிய தகவல் கொடுக்கத் தவறியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதற்காகவே இந்த தண்டனை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

33 வயதான இவர் 24-9-90 இல் கைதாகி விளக்க மறியலில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## வவுனியாவில் கொள்ளை பாக். பிரஜைகள் கைது

(வவுனியா)

வவுனியாவில் பணம் கொள்ளையிட்ட மூன்று உல்லாசப் பயணிகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பாகிஸ்தானியர்களாக இருக்கலாமா என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள பிரபல வியாபார நிலையம் ஒன்றிற்கு சிகரட் வாங்கச் சென்ற இவர்கள் அங்கிருந்து ரூ. 71,000 ஐக் கொள்ளையிட்டுச் சென்ற போது மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

## பயிற்சிக் கருத்தரங்கு

பல்கலைக்கழக எழுதுவினைஞர்களுக்கும், அதே தரத்திலான ஊழியர்களுக்கும் இன்று காலை 8.30 முதல் 4.30 வரை பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது

## அமரர் இராமலிங்கம் நினைவுகள்

ஈழத்தின் தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை அமரர் திரு. சி. இராமலிங்கம் அவர்களின் மூன்றாம் நினைவு தின நிகழ்வும் புதிய சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சிவகுப்பு ஆரம்பவைபவமும், இன்று 16 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்ட போட்டியில்

## கொழும்பு பல்கலை. மே-18 இல் திறக்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகம் மே 18 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் போவதாகவும் பல்கலைக்கழகத்தின் கட்டடங்களுக்குள் தாங்கள் இருக்கப் போவதில்லை என்றும் மாணவரவை உறுதியளித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார்.

# கொழும்பு பல்கலை. மாணவர் மீது பொலிஸார் தடியடி =பல மாணவர்கள் காயம்-

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு வந்த சுமார் 500 பட்டதாரி மாணவர்கள் மீது பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவம் வளாகத்துக்கு அருகிலுள்ள முல்ல சந்தியில் இடம் பெற்றது.

எட்டு மாணவர்கள் காயமடைந்தனர்.

கணிதத்துறைப் பீடாதிபதியும், பல்கலைக் கழகங்கள் ஆசிரியர் சங்கங்கள் இணையத்தின் தலைவருமான பேராசிரியர் நளின் டி. சில்வா. மாணவர் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பியின் கிளர்ச்சிக்குப் பிறகு பல்கலைக் கழகம் திறக்கப்பட்டது முதல் மாணவர்களுக்கான தங்குமிடப் பிரச்சினை இருந்து வருகிறது என்றார் அவர். கொழும்பு பல்கலைக் கழகத்தில் விரிவுரை மண்டபங்கள் பற்றாக்குறை நிலவுவதோடு மருத்துவ பீடத்தில் மாணவர்கள் தரையில் இருக்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும். புளூமவுண்டின் மருத்துவ பீட விடுதிக்குச் சென்ற 180 கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களை அங்கிருந்து வெளியேற முடியாமல் பொலிஸார் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுள்ளனர். விடுதியில் சிக்கியிருக்கும் மாணவர்களில் சிலர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர். மற்றவர்கள் கடந்த செவ்வாய் முதல் உணவு எதுவும் இல்லாமல் பட்டினியாக இருப்பதாக அங்கிருந்து பக்கத்து தோட்டம் வழியாகத் தப்பி வந்த இரு மாணவர்கள் கூறுகிறார்கள்.

மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும். பலவந்தமாக விடுதியில் இருப்பவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் அதன் பிறகுதான் பல்கலைக் கழகம் திறக்கப்படும் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜி.எம் பீரிஸ் தெரிவித்தார் மாணவர்கள் அச்சுறுத்தலைக் கைவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆங்கில விரிவுரை அறைகள் முப்பதை விடுதியாக மாற்றத் தவறினால் தாம் அதில் அத்துமீறிக் குடியேறப் போவதாக மாணவர் சங்கத் தலைவர் கே. பறணவிதான அறிவித்ததைத் தொடர்ந்தே பல்கலைக் கழகம் மூடப்பட்டதாக துணைவேந்தர் பேராசிரியர் ஜி எம். பீரிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது அத்துடன் மாணவர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அச்சுறுத்தியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என்று பல்கலைக்கழக நிர்வாகம் கூறுகிறது. பல்கலைக்கழகம் மூடப்படுவதற்கு முன்னதாக எந்தவிதக் குழப்பநிலையும் வளாகத்தில் இருக்கவில்லை என்று உண்ணாவிரதமிருக்கும் மாணவர் தலைவர் பறணவிதான தெரிவித்தார்.

6,700 கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களில் பத்து விகிதத்தினருக்கு —670 பேருக்கு மட்டுமே பல்கலைக் கழக நிர்வாகம் இருப்பிட வசதி செய்து தந்திருப்பதாக மாணவர்கள் தெரிவித்தார்கள். கொழும்பில் வீட்டு வாடகை அதிகமானதால் தாம் வெளியிடங்களில் இருப்பது சாத்தியப்படாது என்றும் மாணவர்கள் தெரிவித்தார்கள்.

## மத்திய அரசின் முடிவுக்கு ஜெயலலிதா பாராட்டு

விடுதலைப்புலிகள் அமைப்பை சட்டவிரோதமானது எனப் பிரகடனம் செய்தமைக்காக தமிழக மக்களின் சார்பில் நன்றியும், பாராட்டும் தெரிவிப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் மத்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டப் பெரிதும் உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் பழிவாங்க சந்தர்ப்பம் பயன்படலாம் -மு. கருணாநிதி

(சென்னை)

தமிழ்நாட்டில் அனைத்திந்திய அண்ணா தி மு. க. அரசு தனது அரசியல் எதிரிகள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக்கூடும் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட பிரகடனத்தை வரவேற்று அறிக்கை வெளியிட்ட அவர், அதில் அரசியல் எதிரிகளைப் பழிவாங்க இச்சட்டம் பயன்படுத்தப்படலாம் என்று அச்சம் வெளியிட்டுள்ளார்.

## இலங்கைத் தமிழருக்கு தன்னாட்சிவழங்கவேண்டும் - இ. மார்க்ஸிஸ்ட்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்குவதில் அரசியல் தீர்வொன்றை எட்டும்படி சிறிலங்கா அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருமாறு இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய அரசைக் கேட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புகலிடம் தேடியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எதிராக புலிகள் மீதான தடையைப் பயன்படுத்தாது இருக்குமாறு பார்த்துக் கொள்ளும்படி கட்சி அரசை வற்புறுத்தியுள்ளது.

## தமிழகத்தி

பல்வேறு சர்வதேச அமைப்புகளின் ஆட்சேபத்தை அடுத்து, அகதிகளின் விருப்பத்தைப் புதிதாகக் கோருவதற்காக புதிதாகத் தமிழில் தயாரித்த படிவங்கள் வழங்கப்படுகின்றன என சொல்லப்படுகிறது.

## யாழ்ப்பாணம்

## 'அத்த' பத்திரிகை ஆசிரியர் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

அத்த பத்திரிகை ஆசிரியர் லொக்குபண்டா வனிகசேகராவும், அதன் வெளியீட்டாளர் ஆ. கர்மதாஸவும் தலா 5,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கான உத்த

## கொழும்பு பல்க. மாணவர் தொடர்ந்து உண்ணாவிரதம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகம் மூடப்பட்டதனைக் கண்டித்து மாணவர் நடாத்தும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக நடைபெறுகிறது.

மூடப்பட்டுள்ள கொழும்பு பல்கலைக் கழகம் உடனடியாக மீண்டும் திறக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பத்துமாணவர்கள் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர் இவர்களில் கொழும்பு பல்கலைக் கழக மாணவ சங்கத்தின் செயலாளர், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் மாணவன், பௌத்த பிக்கு மாணவன் ஒருவர் ஆகியோரும் அடங்குவர்:

உண்ணாவிரதம் இருக்கும் இம் மாணவர்களை புகைப்படம் பிடிக்க பொலிஸார் அனுமதிக்கப்படவில்லை.

இதனிடையே பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறாத மாணவர்களுக்கு உணவு உட்பட ஏனைய அனைத்து வசதிகளும் மறுக்கப்பட்டிருப்பதாக மாணவ பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

படவுள்ளது

இக் கருத்தரங்கினை யாழ் பல்கலைக்கழக நிர்வாகத் துறையே மேற்கொண்டுள்ளது.

இதில் கணிசமான ஒரு பகுதியினருக்கே இக் கருத்தரங்கு முதலில் வழங்கப் படுமென வும் தெரிவிக்கப்படுகிறது (05)

## உதைபந்தாட்ட போட்டியில் குருநகர் சாதனை

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்து உதை பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் சுற்றுப் போட்டித்தொடரில் குருநகர் மிகவும் சிறப்பாக விளையாடி ஓர் சாதனையை நிலைநாட்டியது.

சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி ஒன்றன்பின் ஒன்றாக 14 கோல்களைப் போட்டு கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணியை 14-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. இந்த மைதானத்தில் இதுவரை காலமும் எந்த ஒரு அணியும் இத்தகை கோல்களைப் போடாததினால் இது ஒரு சாதனையாக கணிக்கப்படுகிறது. (42)

### யாழ்ப்பாணம்

டர்ந்து இம்மாவட்டங்களைச் சேர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் அடுத்து வரும் வாரங்களில் தாயகம்திரும்பிய கணிசமான அளவு மக்கள் இம் மாவட்டங்களைச் சென்றடைவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

### நிவாரணம்:-

இவ்வாறு யாழ் மாவட்டத் திற்கு வரும் மக்களிற்குரிய நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு வசதியாக இம்மக்கள் தமது தகவல்களை உடனடியாக தமது பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக யாழ். செயலகத்துக்கு அறிவிக்கும் படி கோரப்பட்டிருக்கிறது. இம்மக்களுக்கு விசேட நிவாரணத் திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப் படுத்தப்பட இருப்பதாகவும் தெரிவிக்கபபட்டது. [க]

ராவும், அதன் வெளியீட்டா

### விடுதலைப்

ஏற்படுத்த காரணமாக இருந்தது இவ்விதம் தமிழீழ மக்களுக்கு எதிராகபெரும்வரலாற்றுத் தவறுகளை இழைத்துவிட்டு இப்பொழுது நம் இந்திய விவகாரத்தில் தலையிடுவதாக எமது இயக்கம்மீது இந்திய ஆட்சிபீடம் குற்றம் சுமத்துகிறது இந்தக்குற்றச்சாட்டு விசமத்தனமானது.

விடுலைப் புலிகள் இயக்கம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக டில்லி ஆட்சிபீடம் கூறுகிறது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. விடுதலைப் புலிகள் இந்தியாவின் விரோத சக்தியாகச் செயற்படவில்லை. அத்துடன் இந்தியாவின் தேசிய ஒருமைப் பாட்டைக் குலைக்கவும் எண்ணவில்லை. இந்தியா அஞ்சுவது புலிகளுக்கு அல்ல தமிழரின் இன உணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்குமே இந்தியா பயப்படுகிறது தமிழ்த் தேசாபிமான எழுச்சியின் புரட்சி வடிவமாகவே இந்திய அரசு புலிகளையும், புலிகளின் தலைவர் பிரபாகரனையும் நோக்குகிறது. இதனால் தான் புலிகள் இயக்கத்தைத் தடை செய்து தலைவர் பிரபாகரன் மீது மாசு கற்பிக்க இந்தியா முயற்சிக்கிறது.

அயல் நாட்டில் இயங்கும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமான புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதன் மூலம் தமிழ் நாட்டில் கருவாகிவரும் தேசிய உணர்வலைகளுக்கு அணைகட்டி விடலாமென டில்லி ஆளும் வர்க்கம் கருதுகிறது எனவே புலிகள் மீதான இத்தடையானது தமிழ் நாட்டுத் தமிழரின் இனவுணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்கும் இடப்பட்ட விலங்குகள் என்றே கருத வேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய பொறுப்பு தமிழக மக்களையே சாரும்.''

வார்கள். இதற்கான உத்தரவை கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் ரி. பி. வீரசூரியா கடந்த செவ்வாயன்று பிறப்பித்தார்.

கறுப்புப் பூனைகள் கொலைகளைச் செய்தார்கள் என்று முன்னாள் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவை மேற்கோள் காட்டி ஏப்பிரல் 4, '92 இல் செய்தி வெளியிட்டது தொடர்பாகவே அத்த மீது அவதூறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### திருமலையில்

ரான யுத்தத்தை மட்டும் நடாத்தவில்லை தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் மறைக்கும் செயல்களும் தீவிரமாக நடாத்தப்பட்டு வருகின்றன என அவர்மேலும் தெரிவித்தார்

### பழுகாமம்

ப்பை சேர்ந்தவர்களான கிரிபண்டா யோகராசா (வயது-19, திக்கோடை) அழகையா குமாரசிங்கம் (வயது 22, திக்கோடை), சின்னத்தம்பி அரசரத்தினம் (வயது 20, காந்திபுரம்), கனகராசா யோகராசா (வயது-27, காந்திபுரம்), முருகேசு சிங்கராசா (வயது-20 காந்திபுரம்), தவராசா நந்தகுமார் (வயது-14, காந்திபுரம்), முருகேசுப் பிள்ளை சண்முகம் (வயது-20, காந்திபுரம்), நல்லதம்பி சுந்தர மூர்த்தி (வயது-18 காந்திபுரம்), செல்லத்துரை உலகநாதன் (வயது-24, காந்திபுரம்), இராமன் ஆனந்தன் (வயது-16) ஆகியோர் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

### எதிர்

தாசாவின் வெளிவிவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் இந்த முடிவு எதிர்பார்த்தது தான் எனவும் அவர் தெரிவித்தார்.

வர் தெரிவித்துள்ளார்.

எனினும் மாணவர்களின் நடவடிக்கைக்கு பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பல்ல எனவும் இதற்கான விளைவுகளுக்கும் பல்கலைக்கழகம் பொறுப்பல்ல எனவும் அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நினைவு நாள்

இன்று (16-5-92) மாலை 4 மணிக்கு யாழ். ஆசனக் கோவில் திறந்த வெளியரங்கில் நாட்டுக் கூத்துக் கலாநிதி 'புகுந்தார்' ம. யோசேப்பு பத்தாவதாண்டு நினைவு வைபவத்தை யாழ். நவரச நாட்டுக் கூத்துக் கலாமன்றம்நடத்துகின்றது.

யாழ், பேராலய பங்குத் தந்தை வண. எஸ், எச். ஜெபநேசன் அடிகள் தலைமையில் பேராசிரியர் கா, சிவத்தம்பி பேருரையையும் கடற்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஸ்ரனிமாஸ்டர் சிறப்புரையையும் வழங்குவர்

### வீதி விபத்து

வய்து] சாவகச்சேரி ஆகியோர் படுகாயமடைந்தவர்கள் ஆவர் இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பகுதிக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். [பா]

### அம்பாறையில்

இராணுவத்தாலும் முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் தாக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் அங்கிருந்து வெளியேறி வேறிடங்களுக்கு செல்ல முயலும் தமிழர் அம்பாறை எல்லையில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப் பட்டு வருகின்றனர்.

அம்பாறை எல்லையில் வைத்து பஸ்ஸில் பயணம் செய்யும் தமிழர்கள் இறக்கப்பட்டு கைது செய்யும் நடவடிக்கை கடந்த இரண்டு வாரங்களாக இடம் பெற்று வருகிறது.


ஊர்காவற்றுறை பலநோக்குக்

கூட்டுறவுச் சங்கம்

சகல பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும்

**விசேட பொதுக்கூட்டம்**

**23-5-1992**

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 23-5-92ஆந் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி. எஸ். சேவிஸ் நிலைய, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) சங்கத்தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப் பெறும். தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச

முக்கிய குறிப்பு: கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாதோர் தங்கள் கிளைக்குழுச் செயலாளரிடமோ அல்லது தலைமைக்காரியாலயத்தில் செயலாளருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேட்டுக்கொள்கின்றோம்.

(சி/4425)



## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]



## காணவில்லை

### கந்தையா நாகம்மா

கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா நாகம்மா என்பவரைக் கடந்த செவ்வாயன்று காணவில்லை. இவர் ஐம்பது வயது மதிக்கத்தக்கவரும் சித்த சுவாதீனமும் உடையவர். நீளச் சட்டை அணிந்துள்ளார். கண்டவர் உடனடியாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறியத் தரவும்.

க. செல்வபாலன்
சிவன் வீதி, பரவக்குளம்,
திருநெல்வேலி.

(2576)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.